**<u>O.S. No. 164/2025</u>**
**<u>Date :</u> 26.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 1 **திரு. சிங்கராஜ்**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. நான் பிறந்து வளர்ந்தது சின்னமனூர் தான். பிரதிவாதி வள்ளிமயிலில் மாமனார் எனக்கு உறவினர் என்றால் சரிதான், எனது பங்காளி. ஆரம்ப காலத்தில் அவர் சின்னமனூரில் அரிசி ஆலை, லாரி தொழில் வைத்து வசதியாக வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான் அப்போது நாங்கள் சிறுவர்கள். தற்பொழுது இந்த தாவா கிரைய ஒப்பந்தமானது சிங்கத்தேவர் காலத்திலிருந்து அவர்கள் குடியிருந்து வந்த வீடு என்றால் சரிதான். அந்த வீடானது ஊரின் மையப் பகுதியில் பிரதான பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

2. அந்த வீட்டைப் பொறுத்த மட்டில் வில்லங்கமோ, வாரிசு பிரச்சனையோ எதுவும் இல்லை என்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். ஒப்பந்தத்தில் ஒரு வருட காலம் அவகாசம் எதன் காரணமாக ஏற்படுத்தப்பட்டதென்றால் உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தினால் பணம் வேண்டும் என்று பிரதிவாதி கேட்டதன் காரணமாகவும் அவகாசம் தருமாறு பிரதிவாதி கேட்டதால் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. கிரையத்திற்காக இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான்.

3. இருதய நோய் பிரதிவாதியின் கணவருக்கு இருந்தது அதற்கு வைத்தியம் பார்ப்பதற்காகத்தான் பணம் என்னிடம் கேட்டார்கள் என்றால் சரிதான், அவருக்கு என்ன நோய் என்று எனக்கு தெரியாது. இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தி 50–வது நாளில் பிரதிவாதியின் கணவர் பூவண்ணன் இறந்து விட்டார் என்றால் சரிதான். ரூ.40 லட்சம் வைத்தியத்திற்கு பணம் தேவைப்படுகிறது என்றும் என்னிடம் கடன் கேட்டு தாவா சொத்தை விற்பதற்காக என்னிடம் ஒப்பந்தம் ஏற்படுத்தினான் என்றால் சரியல்ல. சொத்திற்கு கையெழுத்து போட

வேண்டியது வள்ளிமயில் தான், அவர் ஆரோக்கியமாக நல்ல நிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான்.

4. நான் திருச்சியில் கட்டுமான தொழில் செய்து வருகிறேன். நான் சொல்லித்தான் இந்த கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அடமான கடன் போடலாம் என்று நான் சொன்னேன், அதற்கு வட்டி கேட்பேன் என்ற காரணத்திற்காக பிரதிவாதி என்னிடம் கிரைய ஒப்பந்தமாக ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னதன் பேரில் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

5. நான் தான் ஈடு கடனுக்காக ரூ.72 லட்சம் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி ரூ.42 லட்சம் தருவதாக ஒப்பந்தத்தில் எழுதிக் கொண்டு ரூ.20 லட்சம் தான் உள்ளது என சொல்லி அவரிடம் ரூ.20 லட்சம் கொடுத்து ஒப்பந்தத்தில் கையெழுத்து பெற்றேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த ஈடு கடனுக்கு தான் இந்த கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு ஈடு கடனாக எழுதிக் கொண்டதற்கு மாத, மாதம் வட்டி பணம் எதுவும் நான் பிரதிவாதியிடம் வட்டி ஏதும் வாங்கினேனா என்றால் அடமானக் கடன் ஏற்படுத்தவில்லை.

6. கிரைய ஒப்பந்தம் தான் ஏற்படுத்தப்பட்டது என்பதால் வட்டி எதுவும் வாங்கவில்லை. தாவா கிரைய ஒப்பந்தம் எனது சவுகரியத்திற்காக, லாப நோக்கத்திற்காக எனக்கு சாதகமாக மட்டுமே என்னால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. 13.12.2021 ம் தேதியன்று இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. எழுத்துப்பூர்வமாக பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பி கிரைய ஒப்பந்தத்தை முடித்துக் கொள்ள அழைக்கவில்லை என்றால் சரிதான், வாய்மொழியாக அழைத்தேன். 3 வருடம் 4 மாதம் கழித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. தனது கணவர் இறந்து விட்டார் என்றும், தனக்கு வேறு வருமானங்கள் எதுவும் இல்லை என்றும், ஒப்பந்தப்படி பாக்கி பணத்தை கொடுத்து விட்டு கிரையம் முடித்துக் கொள்ளலாம் என்று பல நபர்கள் மூலம் பிரதிவாதி என்னை பலமுறை அணுகினார் என்றால் சரியல்ல, ஒரு நாளும் அவ்வாறு

அனுகவில்லை. நான் அவ்வாறு செய்யாமல் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. வேறு நபர்கள் மூலம் கிரையத்தை முடித்துக் கொள்ளலாம் என பிரதிவாதி அணுகும் போது நான் புரோக்கர் மூலம் அதை தடுத்து விட்டேன் என்றால் சரியல்ல.

8. இது சம்பந்தமாக பிரதிவாதி என்னை வந்து அடங்கி ஏன் இவ்வாறு செய்து கொள்ள மறுக்கிறீர்கள் என்றும், வேறு நபர்களுக்கு கிரைய செய்ய அனுமதிக்க மாட்டீர்கள் என கேட்டபோது ஒப்பந்தப்படி ரூ.55 லட்சத்திற்கு கிரையம் எனது பெயருக்கு முடித்து தர வேண்டும் என நான் பிரதிவாதியை கட்டாயப்படுத்தினேன் என்றால் சரியல்ல. தற்பொழுது பிரதிவாதி ஒப்பந்தப்படி கிரையம் முடித்து தர தயாராக இருந்தும், நான் பாக்கி கிரையத் தொகையை கொடுத்து நான் பத்திரம் பதிவு செய்து கொள்ள தயாராக இருக்கிறேனா என்றால் எனக்கு கிரையம் முடித்துக் கொள்ள விருப்பமில்லை. எனக்கு எனது பணம் தான் திரும்ப வேண்டும்.

9. நான் ஆரம்ப காலத்தில் இருந்தே சொத்தைக் கிரையம் முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே பிரதிவாதியின் கணவருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் கடன் கொடுத்துவிட்டு இந்த ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம். தற்போது பிரதிவாதியின் கணவர் இறந்து விட்டதால் அதே உதவியை பிரதிவாதிக்கும் செய்யுங்கள் என கேட்டால் தற்போது என்னால் முடியாது. எனது நோக்கமே தாவா சொத்தை குறைந்த விலையில் வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. நான் 3 ¼ வருடம் கழித்து அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதி பதிலறிவிப்பு தான் சொத்தை கிரையம் செய்து தர தயாராக இருப்பதாக பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை வாங்கிய பிறகும் நான் மீதி பணத்தை கொடுத்து கிரையம் முடித்துக் கொள்ள நான்

தயாராக இல்லை. பிரதிவாதி சொத்தை முடித்து தர தயாராக இருந்தும், நான் கிரையம் செய்து கொள்ள தயாராக இல்லை, எனக்கு பணம் தான் திரும்ப வேண்டும். அதன் அடிப்படையில் நான் பணத்தை திரும்பி கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த சொத்தை எப்போதும் வாங்குவதற்கு நான் தான் எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்றும், அவ்வாறு நான் தயாராக இல்லாத பட்சத்தில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.26 16:15:21 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.